[1979 பிப்ரவரி 26

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, நகராட்சிகளுக்கு எத்தகைய சதவிகிதம், பேரூராட்சிகளுக்கு எத்தனை சதவிகிதம் மானியம் வழங்கப் படுகிறது. 1978–79-ம் ஆண்டுகளில் எவ்வளவு தொகை உதவி அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நகராட்சிகளுக்கு ஓராண்டுக்கு ரூ. 15 லட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது. பேரூராட்சிகளுக்கு பாதித் தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இன்று ஊராட்சி மன்றங்களுக்கு ரோடுக்காக கொடுக்கும் மானியமானது ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ரூ. 30,000-க்கு மேல் கொடுக்க வில்லை. அதை அதிகப்படுத்த திட்டம் உண்டா? அப்படிச் செய்தால் அந்த ரோடுகளை நல்ல முறையில் சீர்படுத்த முடியும். அதைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பேரூராட்சி செலவிடும் தொகையில் பாதி மானியமாக வழங் கப்படுகிறது. அதை அதிகப்படுத்தும் உத்தேசம் இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தூசுபடாத தார் சாலை போடவும், சாதாரண தார் சாலை போடவும், இணைப்புச் சாலை போடவும் மானியம் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தூசுபடியாத சாலை அமைக்க மானியம் வழங்கும் செயற்குறிப்பு மட்டும்தான் உள்ளது.

ஊராட்சிகள் திரையரங்குகள் நடத்தல்

*வினா எண். 186—திரு. கே. உச்சி : மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்கள் நிதி வசதியைப் பெருக்கும் நோக்கததில் சினிமா தியேட்டர் கட்ட லைசென்ஸ் கொடுக் கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஊராட்சி மன்றங்களே சினிமா தியேட்டர்களைக் கட்டி நடத்தி வருகிறதா ?

(இ) நீலகிரி மாவட்டத்தில் எந்தெந்த ஊராட்சி மன்றங் களில் இருந்து கோரிக்கை வந்துள்ளது ?

சட்டமன்ற LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; (அ) இல்லை.
(ஆ) இல்லை.

(இ) நீலகிரி மாவட்டம், நடுவட்டம் பேரூராட்சியிலிருந்து மட்டும் கோரிக்கை வரப்பெற்றதாகவும் கூடுதல் விபரங்கள் கேட்டு அதை திருப்பி அனுப்பியிருப்பதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, கூடலூர் தொகுதியில் உள்ள நடுவட்டம் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அங்கேயுள்ள மக்கள் சினிமா பார்க்கவேண்டுமானால் உதகைக்கோ அல்லது கூடலூருக்கோதான் செல்லவேண்டும். ஆகவே, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன மனுவை மீண்டும் பரிசீலிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தொழிலாளர்கள் நிரம்பிய பகுதி என்பதால் அங்கே சினிமா பார்க்க வசதி செய்து கொடுக்க என்று திட்டம் இல்லை. பேரூராட்சி லாபம் கிடைக்கும் என்ற நிலை இருந்தால்தான் மேற்கொள்ளப்படும். லாபம் கிடைக்கும் நிலை இல்லை. ஆகவே கைவிடப்படுகிறது.

திரு. போ. கோபாலன் : தலைவரவர்களே, நடுவட்டம் பேரூராட்சி அந்த சினிமாக் கொட்டகையைக் கட்டி மற்றவர்களுக்கு அதை வாடகைக்கு விட்டு அதன் மூலம் வருமானம் ஈட்ட திட்டமிட்டு இருக்கிறார்கள். ஆகவே, பேரூராட்சி நஷ்டம் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆகவே, அரசு அதைப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதைப்பற்றி நிர்வாக அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதினால் பிறகு கவனிக்கலாம்.

திரு. க. அரங்கசாமி : தலைவரவர்களே, இது போன்ற ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் திரையரங்குகள் கட்டவேண்டுமென்று விரும்பினால் அதற்கு அரசு என்னென்ன முறைகளைக் கடைப்பிடிக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, முறைகள் ஏதும் இல்லை. அதனால் லாபம் வரும் என்று உறுதியாகத் தெரிந்தால் அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, அந்தத் தொழிலில் லாபம் வராது என்று அரசு கருதுவதால் தனியார் துறையில் அனுமதி கேட்டால் அனுமதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : லாபம் வராத காரணத்தால் தனியார் யாரும் அதற்காக விண்ணப்பிக்கவில்லை.

திருச்செந்தூர் நகருக்கு குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 187—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செதூந்ர் நகருக்கு ஆவுடையார் குளத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ;

(அ) இல்லை.

(ஆ) இவ்வினு எழவில்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, திருச்செந்தூர் நகர மக்களுக்கு தற்போது வழங்கப்படும் குடிநீர் பற்றாக்குறையாக இருப்பதால், அந்தத் திட்டத்தை விரிவு படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் நகரின் மக்கள் தொகை இரட்டிப்பாசு பெருகிவிட்டதாலும், எண்ணற்ற பயணிகள் அந்நகருக்கு வருவதாலும் திருச்செந்துர் நகருக்கு வழங்கப் படும் தண்ணீர் போதுமானதாக இல்லை என்பதாலும், அத் திட்டத்தை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும். இத் திட்டத்திற்கான ஆய்வுத் தொகையான ரூ. 27,200-ஐ பேரூராட்சி தமிழ்நாடு வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். இதனை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஏற்று நடத்த வேண்டும் என்று பேருராட்சி தீர்மானம் நிறைவேற்றி இருந்தாலும் அத் தொகையை இன்னும் வாரியத்திற்குப் பேரூராட்சி செலுத்தவில்லை. அத்தொகை செலுத்தப்பட்ட பின் குடிநீர் வாரியம் இதனை துவங்கும்.

ஆய்வின்போது ஆத்தூர் அருகே ஓடும் தாமிரபரணி ஆறு மற்றும் திருச்செந்தூர் அருகேயுள்ள ஆவுடையார்குளம் ஆகிய இடங்கள் நீர் எடுப்பதற்கான மூல இடங்களாக ஏற்றும் ஆய்வு செய்யப்படும்.